சொ.எ.எண்.88

29/1/08

அனைவருக்கும் கல்வி இயக்கம்,
தமிழ்நாடு

# செய்திக்குறிப்பு

தமிழகத்தில் 6 முதல் 14 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளையும் பள்ளியில் சேர்ந்து நரமான கல்வி வழங்கும் பணியினை அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டம் முனைப்புடன் செய்து வருகிறது. இத்திட்டம் செம்மையாக நடைபெறுவது சார்ந்து நடுவண் அரசின் ஆய்வுக்குழு தமிழகத்தில் ஈரோடு, தர்மபுரி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பள்ளிகளை **24.01.2008, 25.01.2008** மற்றும் **28.01.2008** ஆகிய தேதிகளில் ஆய்வு செய்தனர். குழுவின் உறுப்பினர்களாக **DFID (Department of Funding International Development)** பிரதிநிதி திரு.மைக்கேல் வார்டு மற்றும் நடுவண் அரசின் பிரதிநிதியாக **NCERT** ஓய்வுபெற்ற பேராசியர் திரு.**C.S.**நாகராஜு அவர்களும் ஆய்வினை மேற்கொண்டார்கள். இவ்வாய்வு அறிக்கையினை 29.01.2008 அன்று **DFID** பிரதிநிதி திரு.மைக்கேல் வார்டு அவர்களால் தமிழகத்தின் **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு** அவர்களிடம் அளிக்கப்பட்டது.

ஒப்பம்
for மாநிலத் திட்ட இயக்குநர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.